**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**நாள்** 09.09.2025

**அசல் வழக்கு எண்.136/2022**

**வா.சா.1 – முருகன், த/பெ.வடிவேல்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நான்காவது ஆவணம் மாதிரி வரைபடம் ஆகும் அதனுடைய பரப்பளவு தெரியுமா என்றால் தெரியாது. தோராயமாக 3270 சதுரடி என்றால் தெரியாது. தோராயமாக 7 ½ சென்ட் இருக்கும் என்றால் ஞாபகம் இல்லை. நீங்கள் வழக்கு சொத்து உள்ள இடத்திற்கு சென்று வருவீர்களா என்றால் சென்று வருவேன். நீங்கள் சுமார் 30 ஆண்டுகளாக ராணிப்பேட்டையில் குடியிருக்கிறீர்கள் என்றால் சரி இல்லை. 1999 இருந்து நான் ராணிப்பேட்டையில் குடியிருந்து வருகிறேன். மாதிரி வரைபடத்தில் F என்று குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் உங்கள் அண்ணன் கிருஷ்ணன் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அதேபோல் G என்கிற பாகம் உங்கள் அப்பாவிடம் இருந்து உங்களுக்கு கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். அதனை நீங்கள் கிரயம் கொடுத்துவிட்டு சென்று விட்டீர்கள் என்றால் சரிதான். அந்த மாதிரி வரைபடத்தில் H என்கிற குறிப்பிட்ட இடத்தில் தான் முதல் பிரதிவாதி வசித்து வருகிறார் என்றால் சரிதான். அது எங்களுடைய மூதாதையர் சொத்து தான். H பாகம் உங்களுடைய மூதாதையர் சொத்து என்று காட்டுவதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் பாதத்தில் வந்த சொத்து ஆகும். ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நீங்கள் அவ்வாறு ஆவணம் தாக்கல் செய்யவில்லை வழக்குக்காக பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. பிரதிவாதி வசந்தகுமாரி 4 அடி நாராசம் வழியாக தான் செல்கிறார் என்றால் சரிதான். அந்த 4 அடி பாதையில் உங்களுடைய அண்ணன் கிருஷ்ணன் என்பவர் அடைத்துக்கொண்டு படிக்கட்டி இருக்கிறார் அந்த படிக்கட்டில் ஏற்பட்ட

பிரச்சினையில் தான் உங்கள் அண்ணன் தூண்டுகோலின் இந்த வழக்கு நீங்கள் தாக்கல் செய்து கொண்டீர்கள் என்றால் சரியில்லை. உங்களிடம் காட்டப்படும் ஆவணம் உங்கள் தந்தையார் கடந்த 1979 ஆம் ஆண்டு எழுதி வைத்த உயில் ஆவணம் என்றால் தெரியாது. உயில் உங்க அப்பா எழுதியது தான் என்றால் தெரியாது. வடிவேல் யார் என்றால் என்னுடைய அப்பா ஆவார். அவர்தான் உயில் எழுதினார் என்றால் தெரியாது. உங்கள் தந்தையார் இறப்பதற்கு முன்பாக உங்கள் தாயார் சரோஜா அம்மாள் இறந்துவிட்டார் என்றால் சரிதான். உங்கள் அப்பா எழுதிய உயிலில் உங்கள் அம்மாவிற்கு எழுதி வைத்துள்ளார்அதில் உங்கள் அம்மாவுடைய ஜீவ திசைக்கு பிறகு அவருடைய மூன்று பிள்ளைகளான கிருஷ்ணன், முருகன், சண்முகம் அவர்கள் அடைய வேண்டியது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் உயில் எழுதியது தெரியாது. என்னுடைய அம்மா பெயர் இருக்கிறது. என் பேரும் என்னுடைய அண்ணன் பெயரும் இருக்கிறது. அந்த சொத்து மூன்று பேரும் அனுபவிக்க வேண்டியது என்று எழுதப்பட்டுள்ளது ஆனால் உங்கள் அப்பாவிடம் இருந்து நீங்களும் உங்களுடைய அண்ணன் கிருஷ்ணன் என்பவரும் செட்டில்மெண்ட் ஆவணம் மூலமாக எழுதி வாங்கிக்கொண்டீர்கள் என்றால் சரிதான். உங்கள் இருவர் பாகம் போக சண்முகம் என்பவர் அவருடைய பாகசொத்தினை முதல் பிரதிவாதி வசந்தா என்கிற வசந்தகுமாரிக்கு விற்பனை செய்து விட்டார் என்றால் அது பாகம் பிரிக்காத சொத்து எங்கள் அப்பாவிற்கு வந்த பாக சொத்து ஆகும். வழக்கில் உங்களையெல்லாம் ஏமாற்றிவிட்டு உங்கள் அண்ணன் சண்முகம் விற்பனை செய்துவிட்டார் என்று வழக்கில் சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். உங்களை ஏமாற்றியதாக கூறுகிறீர்கள் அது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தீர்களா என்றால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. உங்களுடைய சகோதரர் சிறைக்கு செல்லக்கூடாது என்கிற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் நீங்கள் அவர் மீது புகார் கொடுக்கவில்லை என்றால் உரிமையியல் வழக்கு தான் தாக்கல் செய்து உள்ளேன் குற்றவியல் புகார் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை. உங்கள் சகோதரர் அனைவரும் கூட்டு சதி செய்து முதல் பிரதிவாதியிடம் இருந்து பணம் பறிக்க வேண்டும் என்கிற உள்நோக்கத்தில் இந்த

வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியில்லை. உங்களுடைய பாகம் ஏற்கனவே பிரிக்கப்பட்டுவிட்டது அதை மறைத்து இந்த வழக்கு தாக்கல் செய்து கொண்டீர்கள் என்றால் சரியில்லை. ஆகவே நீங்கள் கோரிய பரிகாரம் உங்களுக்கு வழங்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.